

சிவோஹம் பாராயணத் தொகுப்பு
சிவார்ப்பண மஞ்சரி - 005

ஸ்ரீ மூக பஞ்சசதீ - தமிழ்

மொழி பெயர்ப்பு : ஸ்ரீ காமாக்ஷி தாசர்.

அடியார்கள் அனைவரும் அம்பிகையின் அருள்பெற அர்ப்பணிப்பு
சிவோஹம் சிவார்ப்பணம் தொகுதி - 2025 /01/31 தை வெள்ளி

ஸ்ரீ மூக பஞ்சசதீ

மொழி பெயர்ப்பு : ஸ்ரீ காமாக்ஷி தாசர்.

(அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

பண்: சாளரபாணி   ராகம்: ஆன்ந்தபைரவி   தாளம்: ஆதி

காரணபரசித்ரூபா, காஞ்சீபுர-ஸீம்னி காமபீடகதா |
காசன விஹரதி கருணா,காச்மீர,ஸ்தபககோமலாங்கலதா: ||

காரணம் யாவும் கடந்தசித் ரூபியாய்ப்
பாரினில் காஞ்சியில் காமபீடந் தன்னில்
பூரணக் குங்குமப் பூங்கொடி போலொரு
பேரருள் ரூபம்நின்(று) ஆடல் புரிகுதே. 01

கஞ்சன காஞ்சீநிலயம் கரத்ருத-கோதண்டபாண-ஸ்ருணிபாசம் |
கடினஸ்தநபரனம்ரம், கைவல்யா-நந்தகந்தமவலம்பே : ||

அங்குசம் பாசமும் அம்புக்கோ தண்டமும்
தங்குங் கரங்கள் தன்பாரம் தாளாது.
இலங்கும் திருமேனி கொண்டுமக் காஞ்சியில்
பொங்கும்பே ரின்பத்தின் வேர்கண்டு பற்றினேன் 02

சிந்திதபலபரிபோஷண சிந்தாமணிரேவ காஞ்சீநிலயா மே |
சிரதரஸூ-சரித்ஸூலபா, சித்தம் சிசிரயது சித்ஸூகாதாரா ||

எண்ணும்என் எண்ணப் பலன்கள் நிறைந்திடப்
பண்ணும்சிந் தாமணி ஆகியக் காஞ்சியில்
புண்ணியத் தாலெளி தாகுஞ்சி தானந்தத்
தண்ணருள் செய்கவென் சித்தங் குளிரவே. 03

குடிலகசம் கடினகுசம் குந்தஸ்மிதகாந்தி-குங்குமச்சாயம் | குருதே
விஹ்ருதிம் காஞ்ச்யாம் குலபர்வதஹார்வபௌம ஸர்வஸ்வம் ||

பருவத ராஜனின் பாக்கிய மூர்த்தி
இருதன பாரமும் முல்லை முறுவல்
சுருள்முடி குங்கும மேனியும் கொண்டே
அருளோடு காஞ்சியில் ஆடல் புரிகுதே 04

.

பஞ்சசரசாஸ்த்ரபோதன பரமாசார்யேண த்ருஷ்டிபாதேந |
காஞ்சீஸீம்னி குமாரீ, காசன மோஹயதி காமஜேதாரம் ||

மாமலர் அம்புகள் ஐந்துள மன்மதன்
காமக் கலைகளைக் கற்பிக்கும் போதனாக்
காமக்கண் நோக்கினால் காஞ்சிக் குமாரியக்
காமனை வென்றோனும் காமுறச் செய்தனள் 05

பரயா காஞ்சீபுரயா பர்வதபர்பாயபீனகுசபரயா |
பரதந்த்ரா வயமனயா பங்கஜஸப்ரஹ்மசாரிலோசனயா ||

கஞ்ச மலரித ழோடுற வாகியே
கொஞ்சிக் குலாவிய கோமளக் கண்ணொடும்
மிஞ்சிய சீருடை வெற்புத் தனமோடும்
கஞ்சியி லோங்கிய தேவிக்கா ளாகினோம். 06

ஐச்வர்யமிந்துமௌலே ஐகாத்ம்ய ப்ரக்ருதி காஞ்சிமத்யுகதம் |
ஐந்தவகிசோரசேகரம்,ஐதம்பர்யம் சகாஸ்தி நிகமானாம் ||

அதிப் பிரமத்தோடு ஐக்கிய மாகிய
ஆதிப் பிரக்ருதி அக்காஞ்சி மத்தியில்
பாதிப் பிறைசூடும் ஈசனின் சக்தியாய்
வேதப் பொருளாய் விளங்க இலங்குதே. 07

ச்ரிதகம்பாஸீமானம், சிதிலித-பரமசிவதைர்யமஹிமானம் | கலயே
பாடலிமானம், கஞ்சனகஞ்சுகிதபுவனபூமானம் ||

ஆதிப் பரசிவன் அந்தரங் கத்திண்மை
சேதித்த பீடுடன் சீராயக் கம்பையில்
மேதினிப் போகங்கள் மேலங்கி யாய்க்கொண்ட
பாதிரிப் பூவண்ண்ப் பாவையை எண்ணினேன். 08

ஆத்ருதகாஞ்சீகிலயாம் ஆத்யர்மாருடயௌவனுடோபாம் |
ஆகமவதம்ஸகலிகாம், ஆனந்தாதிவைதகந்தலீம் வந்தே ||

வேத முடிவாகும் மெய்ப்பொருள் காஞ்சியில்
போத அத்வைத ஆனந்தத் தளிராயோர்
மாதின் இளஞ்செருக் கோடே திகழ்கின்ற
ஆதியா மாத்தியா சக்தியை வந்தித்தேன். 09

துங்காபிராமகுசபர, ஸ்ருங்காரிதமாச்ரயாமி காஞ்சிகதம் |
கங்காதரபரதந்த்ரம், ச்ருங்காரா-த்வைததந்த்ர-ஸித்தாந்தம் ||

கங்கா தரனைப் பரவசம் ஆக்கிடும்
மங்கா வபிராம வண்ணத் தனங்கொளும்
சிங்காரச் சாத்திர வத்துவாம் அத்வைத
சிங்காரி யைக்கண்டு சேவித்து நின்றேனே 10

காஞ்சீரத்னவிபூஷாம், காமபி கந்தர்பஸூதிகாபாங்கீம் |
பரமாம் கலாமுபாஸே பரசிவவாமாங்கபீடிகாஸீனாம் ||

காமனைக் காக்கும் கடைக்கண்ணின் நோக்குடன்
சீர்மிகும் காஞ்சிக்கு ரத்தின மாய்ச்சிவன்
வாம மடியினில் மாண்புடன் வாழ்ந்திடும்
மேன்மையாம் சித்கலா ரூபியை வேண்டினேன் 11

கம்பாதீரசராணாம், கருணாகோரகித-த்ருஷ்டிபாதானாம் |
கேளீவனம் மனோமே, கோஷாஞ்சித்பவது சித்விலாஸானாம் ||

மிஞ்சும் கருணைகொள் வீட்சண மோடந்த்க்
கஞ்சியில் கம்பா நதியின் கரையினில்
கொஞ்சி விளையாடும் சித்விலா சங்கட்கென்
நெஞ்சமே லீலா வனமாய் விளங்கவே 12

ஆம்ரதரு மூலவஸதே ஆதிம புருஷஸ்ய-நயனபீயூஷம் |
ஆரப்தயௌவனோத்ஸவம் ஆம்னாயரஹஸ்ய மந்தரவலம்பே||

வாசமாய் மாவடி. தன்னில் அமர்ந்திடும்
ஈசனின் கண்களுக்கு இன்னமு தாய்ப்புது
ஆசை இளமையின் ஆனந்த. ரூபத்தை
நேசமுடன் என் நினைவில் நிறுத்தினேன். 13

அதிகாஞ்சி பரமயோகிபி: ஆதிமபரபீடஸீம்னி த்ருச்யேன |
அனுபத்தம் மம மானஸம்,அருணிமஸர்வஸ்வஸம்ப்ரதாயேன||

ஜோதியாய்க் காஞ்சியில் சோபிக்கும் மாண்புடை
ஆதியாம் பீடத் தமர்ந்திடும் யோகியர்
சீர்தவம் செய்துமே சேவிக்கும் தேவியின்
பாதத் தொடர்பினைப் பற்றுதென் உள்ளமே 14

அங்கிதசங்கரதேஹாம் அங்குசதோரோஜகங்கணாக்லேஷை: |
அதிகாஞ்சி நித்யதருணீம் அத்ராக்ஷம் காஞ்சிதத்புதாம் பாலாம்||

கங்கணக் கைகளால் கும்பத் தனம்படக்
சங்கரன் மேனி தழும்புறக் கட்டிய
மங்கா விளமைகொள் மாண்புடைப் பாலையாம்
மங்கை ஒருத்தியைக் காஞ்சியில் கண்டேனே 15

மதுரதனுஷா மஹீதர, ஜனுஷா நந்தாமி ஸுரபிபாணஜுஷா |
சித்வபுஷா காஞ்சிபுரே கேலிஜுஷா பந்துஜீவகாந்திமுஷா ||

செம்புட்ப பாணமும் தித்திக்கும் வில்லுங்கொண்(டு)
அன்புடன் காஞ்சியில் ஆடல் புரிந்திடும்
செம்பருத் திக்குநேர் வண்ணக் குரிதரும்
அம்பிகை யாலெயான் ஆனந்தம் உற்றேனே. 16

மதுந்ஸமிதேன ரமதே, மாம்ஸல குசபாரமந்த்தமனேன் |
மத்யேகாஞ்சி மனோ மே, மனிஸிஜ-ஸாம்ராஜ்யகர்வ்பீஜேன ||

மன்மதன் ஆணவ காரண மாயின்பப்
பின்முறு வற்கொண்டு பூரித்த கொங்கையால்
மென்னிடை யிட்டந்தக் காஞ்சியின் மத்தியில்
மின்னிய வொன்றிலென் சிந்தை ரமிக்குதே. 17

தரணிமயீம் தரணிமயிம் பவனமயீம் ககனதஹன ஹோத்ருமயீம்|
அம்புமயீமிந்துமயீம்,அம்பாமனுகம்பமாதிமாமீக்ஷே ||

அம்புப் புலிகனல் காலொடு வானுமாய்
அம்புலி ஆதவன் யாகஞ்செய் வோனுமாம்
அம்பிகை யாகியவ் வெட்டுக்கும் ஆதியாம்
அம்பா நதிதீரக் காமாக்ஷியைக் கண்டேன் 18

லீனஸ்திதி-முனிஹ்ருதயே த்யானஸ்திமிதம் தபஸ்யதுபகம்பம்|
பீனஸ்தன பரமீடே, மீனத்வஜதந்த்ரபரமதாத்பர்யம் ||

மோனா மனத்துற்றுக் கம்பையில் சோர்வற்ற
தானத் தியானத் தவம்புரி கின்றவோர்
மீனக் கொடியோனின் வித்தையின் வித்தாரம்
ஆனப் பெருந்தன அம்மையைப் போற்றினேன் 19

ச்வேதா மந்தரஹஸிதே,மாதா மத்யே சவாங்மனோதீதா |
சீதா லோசனபாதே, ஸ்பீதா குசஸீம்னி சாஷ்வதீ மாதா ||

வெண்ணிறப் புன்னகை திண்ணியக் கொங்கைகள்
துண்ணிடை யோடுக் குளிர்ந்தகண் ணோக்குடன்
எண்ணமும் வாக்குமே எட்டாதெக் காலத்தும்
தண்ணரு ளாய்ச்ஜகன் மாதா விளங்குகிறாள் 20

புரத: கதா னு கரவை புரவைரி விமர்தபுலகாங்கலதாம் |
புனதீம் காஞ்சீதேசம்-புஷ்பாயுத-வீர்ய்ஸரஸபரிபாடீம் ||

துங்கமாய்க் காஞ்சியை ஆக்கிப் புராரியால்
அங்கம் புளகிதம் ஆக்கும் அணைப்புற்று
அங்கசன் வீரச் செயல்வெளி தாக்கிடும்
மங்கையை என்முன் எப்போது காண்பேனோ 21

புண்யோ காபி புரந்தரீ புங்கிதகந்தர்பஸம்பதோ வபுஷோ ।
புலினசரீ கம்பாயோ: புரமதனம் புலகனிசுலிதம் குருதே ||

அங்கசன் மாண்பை அதிகமாய் ஆக்கிடும்
சிங்கார ரூபியாய்க் கம்பைத் திடல்களில்
எங்கணுஞ் சுற்றும் எழிலாள் புராரியின்
அங்கம் புளகிதம் ஆகிடச் செய்தனள். 22

தனிமாத்வைதவலக்னம் தருணோருணஸம்ப்ர தாயதனுலேகம்।
தடஸீமனி கம்பாயா:தருணிமஸர்வஸ்வமோத்யமத்ராக்ஷம் ||

செக்கச் சிவந்ததோர் மெல்லிய மேனியும்
மிக்கச் சிறுத்த இடையதுங் கொண்டதோர்
தக்க இளமை ததும்பிய மங்கையை
பக்கமக் கம்பைக் கரைதனில் கண்டனே. 23

பௌஷ்டிககர்மவிபாகம் பௌஷ்பசரம் ஸவிதஸீம்னி கம்பாயா:।
அத்ராக்ஷமாத்த யௌவனம,அப்யுதயம் கஞ்சிதர்தசிமௌலே: ||

பாதி மதிகொள் பரமனின் மாண்புக்கே
ஏதுவாய் என்றும் இளமையாய் உற்றதும்
போதுச் சரங்கொண்டேன் புண்ணியத் தின்பயன்
ஏதெனும் ஏர்பொருள் கம்பையில் கண்டேனே. 24

ஸம்ஶ்ரி தகாஞ்சீதேசே, ஸரஸிஜ தௌர்பாக்ய ஜாக்ரதுத்தம்ஸே।
ஸம்வின்ம்யே விலீயே ஸாரஸ்வதபுருஷகாரஸாம்ராஜ்யே ॥

பாரினில் காஞ்சியில் வாழ்வதும் பங்கஜம்
சோரும் படிவைக்கும் சோமனைச் சூடிடும்
சாரஸ் வதமெனும் சாம்ராஜ்ய ஞானமாம்
சீரிய பேற்றினைச் சேர்ந்து மகிழ்வேனே. 25

மோதிதமதுகரவிஶிகம், ஸ்வாதிமஸமுதாயஸாரகோதண்டம் ।
ஆத்ருதகாஞ்சீ கெலனம், ஆதிமாருண்யபேதமாகலயே ॥ 26॥

உல்லாசம் வண்டுகட்கு ஊட்டும்பூப் பாணமும்
எல்லா மதுரஞ்சேர் இட்சுக்கோ தண்டமும்
சல்லாப மாய்க்கொண்டு காஞ்சியில் ஆடல்காண
எல்லாமுக் காதியாம் ஏர்பொருள் எண்ணினேன் . 26

உரரீக்ருதகாஞ்சிபுரீம்,உபநிஷ-தரவிந்த்குஹரமதுதாரம் ।
உன்னம்ரஸ்தனகலசீம்,உத்ஸவலஹரீம்,உபாஸ்மஹே,ச்ம்போ:||27

உள்ளதும் காஞ்சி உபநிடதக்கஞ்சத்து
உள்ளுரைத் தேனின் பெருக்கமாய் ஆவதும்
ஒள்ளிய கும்ப்த் தனத்தியாம் ஈசனின்
உள்ளத்தின் ஆனந்த வெள்ளத்தைப் போற்றினேன் 27

ஏணஶிஶுதீர்க்கலோசனநம் ஏன:பரிபந்தி ஸந்ததம் பஜதாம் ।
ஏகாம்ர நாதஜீவிதம்,ஏவம்பததூர,மேகமவலம்பே ॥ 28॥

சின்னஞ் சிறுமான் விழியாள் பஜிப்பவர்
இன்னற் பலவுமே நீக்கியே காம்பரன்
இன்னுயிர் ரூபமாய் எங்கும் திகழ்ந்திடும்
இன்னதென் றேதொனா இங்கொன்றைப் பற்றினேன் . 28

ஸ்மயமானமுகம் காஞ்சீம்,அயமானம் கமபி தேவதாபேதம் ।
தயமானம் வீக்ஷ்ய முஹுர்வயமானந்தாம் புதௌ மக்னா: ॥

புன்சிரிப் புக்கொண்டு பூத்த முகத்துடன்
கஞ்சியில் மிஞ்சுங் கருணை வடிவமாம்
செஞ்சுடர்த் தேவியைப் பன்முறை சேவித்து
மிஞ்சிய ஆனந்தப் பாற்கடல் 'மூழ்கினோம். 29

குதுகஜுஷி காஞ்சிதேசே குமுததபோராசி பாகசேகரிதே ।
குருதே மனோவிஹாரம் குலகிரிபரிப்ருடகுலைகமணிதீபே ॥

குலாசல ராஜன் குலத்தின் விளக்காய்
உலாசமாய்க் காஞ்சி உறைகுமு தங்க
ளெலாம்செய் தவமாம் மதிசூடி னாளைக்
குலாவியென் சிந்தைக் குதூகல மாகுதே 30

வீக்ஷேமஹி காஞ்சிபுரே விபுலஸ்தனகலஶகரிம பரவஶிதம் ।
வித்ருமஸஹசரதேஹம்,விப்ரமஸமவாய ஸாரஸந்நாஹம் ॥

பாரத் தனங்களால் வாங்கிய மேனியில்
பூரணக் காமக் கவசமே பூண்டதோர்
சீருரு வாய்த்திகழ் செம்பவ ளம்போன்ற
ஏருரு வத்தைநான் காஞ்சியில் கண்டேனே. 31

குருவிந்த கோத்ரகாத்ரம் கூலசரம் கமபி நௌமி கம்பாயா: ।
கூலங்கஷகுசகும்பம் குஸுமாயுத,வீர்யஸோரஸம்ரம்பம் ॥ 32

செம்மணிக் குன்றெனத் செஞ்சுடர் மேனிகொள்
மன்மதன் வீரத்தின் மாண்புடைச் சாரமாம்
தம்முள் இடித்திடுங் கும்பத் தனங்கொளும்
அம்மையைக் கம்பையில் வந்தித் தடைந்தேனே 32

குட்மலிதகுச கிசோரை:குர்வாணை:காஞ்சிதேச,ஸௌஹார்த்தம்।
குங்குமசோணைர்நிசிதம் குஶலபதம் ஶம்புஸுக்ருதஸம்பாரை:॥

குங்கும மேனியாய் மொட்டுத் தனத்துடன்
தங்கியக் காஞ்சியில் காலத் திகழ்ந்ததோர்
சங்கரன் பண்ணிய புண்ணியச் சங்கத்தால்
மங்களப் பேரின்ப மார்க்கம் திறந்ததே 33

அங்கிதகேன கேனசித்,அந்தங்கர-ணௌஷதேன கமலானாம் ।
அந்த:புரேணஶம்போ:அலங்க்ரியாகாபி கல்ப்யதே காஞ்ச்யாம்॥ 34

பங்கசம் வெட்குறப் பண்ணும் மருந்தெனும்
திங்களைக் கூந்தலில் சேர்த்தணி தேவியாம்
சங்கரா னந்தப் புரத்தினில் தங்கிய
மங்கள வத்துவாற் காஞ்சி யிலங்குதே 34

ஊரீகரோமி ஸந்ததம் ஊஷ்மலபாலேன லலிதம் பும்ஸா।
உபகம்பமுசிதகேலனம் உர்வீதரவம்ஶஸம்பதுன்மேஷம் ॥

அக்கினிக் கண்ணுள ஆடவன் பார்வையை
மிக்கவும் மேற்கொண்டு கம்பையில் கேளிக்கை
ஒக்கப் புரிந்திடும் உத்தமி யாம்கிரி
வர்க்கத்துச் செல்வச் கொழுந்தை வழுத்தினேன் . 35

அங்குரிதஸ்தனகோரகம்அங்கோலங்கார மேகசூதபதே: ।
ஆலோகேமஹி கோமலம், ஆகமஸம்லாபஸாரயாதார்த்யம் ॥

ஆகமக் கோமள வாக்கியத் தத்துவம்
ஆகிய மொட்டுத் தனங்கொளும் அம்மையும்
ஏகாம் பரன்மடிக் கோஅலங் காரமாய்
ஆகும் பொருளை அகக்கண்ணால் காண்போமே 36

புஞ்ஜிதகருணமுதஞ்சித,ஶிஞ்ஜிதமணி காஞ்சிகிமபி காஞ்சிபுரே ।
மஞ்ஜரிதம்ருதுலஹாஸம் பிஞ்ஜரதனுருசி பினாகிமூலதனம்॥

பொங்குங் கருணையும் பூங்கொத் திளநகை
தங்கத் திருமேனி தாங்க மணிகளால்
நங்குத் தொனியிடும் .ஒட்டியா ணம்பூண்ட(து)
ஓங்கச் சிவன்தனம் காஞ்சியில் ஓங்குதே. 37

லோலஹ்ருதயோஸ்மிஶம்போ: லோசனயுகலேன
லேஹ்யமானாயாம் ।
லலிதபரமஶிவாயாம் லாவண்யாம்ருததரங்க மாலாயாம் ॥

தன்திருக் கண்களால் சம்பு பருகிய
அந்த மிகுந்தவ ளாய்ச்சிவன் கொஞ்சிடும்
சுந்தரச் சாகரம் தோன்றும் திரைகளின்
சந்ததி யிற்சிந்தை சாரு மியல்புற்றேன் 38

மதுகரஸஹசரசிகுரை: மதனாகமஸமயதீக்ஷிதடாக்ஷை: ।
மண்டிதகம்பாதீரை: மங்கலகந்தைர்ம்மாஸ்து ஸாரூப்யம் ॥

கம்பைக் கலங்காரி கார்வண்டுக் கூந்தலால்
சம்பரா ரிக்காம சாத்திரத் தீஷைகொள்
பண்புக் கடாக்ஷங்கொள் பார்புகழ் மங்கள
அம்பிகைச் சாரூபம் ஆகவே வேண்டினேன் 39

வதநாரவிந்தவநக்ஷோ,வாமாங்கதடீவஶம்வதீபூதா ।
பூருஷத்ரிதயே த்ரேதா, புரந்த்ரிரூபா த்வமேவ காமாக்ஷி ॥

மும்மகா மூர்த்திக ளாகும் புருஷர்கள்
செம்முகம் தன்னிலும் சீரான மார்பிலும்
தன்மையாய் வாம மடியிலும் சத்தியாய்
அம்மைகா மாக்ஷியே நீயேவிளங் குகிறாய் **40**

பாதாகரீம் பவாப்தே:ஆதாராத்யம்புஜேஷு விசரந்தீம் ।
ஆதாரீக்ருதகாஞ்சீம்,போதாம்ருத வீசிமேவ விம்ருசாம: ॥

ஆதாரப் பங்கயம் ஆறினுள் செல்வதும்
போதம் விளக்கவே காஞ்சியில் பூத்ததும்
பாதகச் சென்மக் கடலேற வைப்பதாம்
வேதமெய் ஞானப் பெருக்கையே ஆராய்வோம் **41**

கலயாம்யந்தச: ஶஶதர கலயாங்கிதமமலசித்வலயாம் ।
அலயாமாகமபீடீ நிலயாம் வலயாங்கஸுந்தரீமம்பாம் ॥

இந்துக் கலைமகு டத்துடன் மும்மலம்
சிந்திய சித்ரூபி ஈசனின் சுந்தரி
அந்தமாய் ஆகம பீடத் தமர்ந்திட்ட
அந்தரி தன்னையென் அந்தரத் திட்டனே. 42

ஶர்வாதிபரம ஸாதக; குர்வானீதாய காமபீடஜூஷே ।
ஸர்வாக்ருதயே சோணிம,கர்வாயாஸ்மை ஸமர்ப்யதே ஹ்ருதயம்॥

பக்தி மிகுந்தோர் பரம்பரை வந்ததும்
நித்தமக் காமபீ டத்தில் நிலைத்ததும்
வத்துக்கள் யாவின் வடிவமாய்ச் செவ்வண்ணக்
சக்திக்கென் னுள்ளம் சமர்ப்பணம் செய்தேனே **43**

ஸமயா ஸாந்த்யமயூகை: ஸமயாபுத்தயா ஸதைவ ஶீலிதயா ।
உமயா காஞ்சீரதயர் ந மய லப்யேத கிந்நு தாதாத்ம்யம் ॥

சந்தியில் செவ்வண்ணச் சாயை உடையாளை
சிந்தை யபேதத் தியானத்தா லென்றுமே
வந்திக்கப் பெற்றாளை காஞ்சிப்பற் றுள்ளாளைச்
சந்தித்துச் சாயுஜ்ய மாம்பதஞ் சாரனோ. **44**

ஐந்தோஸ்தவ பதபூஜன, ஸந்தோஷதரங்கிதஸ்ய காமாக்ஷி ।
பந்தோயதிபவதிபுன: ஸிந்தோரம்பஸ்ஸூ பம்ப்ரமீதி ஶிலா॥

எந்தாய்கா மாக்ஷியே இங்குன்றன் பாதார
விந்தத்தைப் பூஜித்துப் பூரிக்கும் அன்பர்கள்
பந்தமாம் சம்சாரத் தேயுழல் வாரெனின்
சிந்துவில் பாறை மிதத்தல் அரிதன்றே 45

குண்டலி குமாரி குடிலே சண்டி சராசரஸவித்ரி சாமுண்டே।
குணினிகுஹாரிணி குஹ்யேகுருமூர்த்தே த்வாம்நமாமி காமாக்ஷி

குண்டலம் பூண்ட குமாரிக் குருமூர்த்தி
சண்டிச் சராசர காரணச் சாமுண்டி
எண்குண் ரூபி இதயக் குகைமணிக்
குண்டலி யாமுனைக் கும்பிட்டேன் காமாக்ஷி 46

அபிதாக்ருதிர்பிதாக்ருதி: அசிதாக்ருதிரபி சிதாக்ருதிர்மாத:।
அனஹந்தா த்வமஹந்தா,ப்ரமயஸி காமாக்ஷி சாஶ்வதீவிஶ்வம்॥\

இங்குட் பொருளுமாய் எங்கும் அகண்டமாய்
எங்குஞ்சித் ரூபமாய் எங்கும் சடமுமாய்
எங்குமப் பேதவப் பேதப் பொருளுமாய்த்
தங்கி உலகை மயக்குறாய் காமாக்ஷி 47

சிவசிவ பஶ்யந்தி ஸமம் ஸ்ரீகாமாக்ஷீகடோக்ஷிதா: புருஷா: ।
விபினம் பவனமமித்ரம் மித்ரம்லோஷ்டம் ச யுவதிபிம்போஷ்டம் ॥

அம்பைகா மாக்ஷி கடாக்ஷித்த ஆடவர்
நண்பன் பகைவனும் காடும் பவளமும்
பிம்பம் யுவையிதழ் ஒடுஞ்சமன் காண்பர்
அம்பா! சிவசிவ! ஆச்சர்யம் ! ஆச்சர்யம் ! 48

காமபரிபந்திகாமினி காமேஶ்வரி கோமபீடமத்யகதே ।
காமதுகா பவ கமலே காமகலே காமகோடி காமாக்ஷி

காமபீ டத்தில் கமழுங்கா மேச்வரீ
காம கலாரூபி காமகோ டிக்கமலீ
காமனின் வைரிக்குக் காமினி யாகும்
காம துகையெனக் காகுவாய் காமாக்ஷி! 49

மத்யேஹ்ருதயம்மத்யே,னிடிலம்மத்யேஶிரோபி வாஸ்தவ்யாம் ।
சண்டகர ஶக்ரகார்முக சந்த்ரஸமாபாம் நமாமி காமாக்ஷீம் ॥

சந்திரன் போலத் தலையின் நடுவிலும்
இந்திரன் வில்லென நெற்றி நடுவிலும்
சிந்தை நடுவில் தினகரன் போலவும்
அந்தமாய்க் கா-ணுங்கா மாக்ஷியை வந்தித்தேன். **50**

அதிகாஞ்சி கேலிலோலை அகிலாகம யந்த்ரதமயை: ।
அதிஶீதம் மம மானஸம் அஸமஶரத்ரோஹிஜீவனோபாயை:॥

அந்தச் சிவனின் சீவனோ பாயமாய்
மந்திரம் தந்திரம் யந்திரம் ஆய்வேத
சந்தப் பொருளுமாய்க் காஞ்சியி லாடல்செய்
அந்தப் பொருளால் அகங்குளிர்ந் தேனே யான் **51**

நந்ததி மம ஹ்ருதி காசன மந்திரயந்தீ நிரந்தரம் காஞ்சீம் ।
இந்துரவி மண்டலகுசா பிந்துவியந்நாதபரிணதா தருணீ   ॥

சந்திர சூரியர் சாலத் தனங்களரய்
பிந்துவோடு ஆகாச நாதமும் ஆகிய
அந்த யுவதியாய் நிந்தமக் காஞ்சிவாழ்
சுந்தரி என்னுட் சுகித்து நிலைக்கின்றாள் . **52**

ஶம்பாலதாஸவர்ணம் ஸம்பாதயிதும் பவஜ்வரசிகித்ஸாம் ।
லிம்பாமி மனஸி கிஞ்சன கம்பாதட ரோஹி ஸித்தபைஷ்ஜயம்॥

மின்னற் கொடியென மேவிக்கம் பாதீரம்
தன்னில் முளைத்ததோர் மூலிகை இங்கென்றன்
ஜன்மப் பிணிதீர்க்கும் சித்த மருந்தாக
என்னுளத் தன்னையை எண்ணித் துதித்தேனே. **53**

அனுமிதகுசகாடின்யாம் அதிவக்ஷ:பீடமங்கஜன்மரிபோ: ।
ஆனந்தாம் பஜே தாம் ஆனங்கப்ரஹ்ம,தத்வபோதஸிராம் ॥

மன்மதன் வைரியின் மார்பெனும் பீடத்தில்
இன்னிய பாரத் தனங்களால் இன்பஞ்செய்
அன்னையாம் துங்கப் பரப்ரம்ம தத்துவம்
என்னுமப் போதத்தை என்றும் பஜிக்கிறேன் **54**

ஐக்ஷிஷிபாசாங்குஶதர,ஹஸ்தாந்தம் விஸ்மயார்ஹவ்ருத்தாத்தம்।
அதிகாஞ்சி நிகமவசாம் ஸித்தாந்தம் ஶூலபாணிஶுத்தாந்தம் ॥

அங்குசம் பாசம் அணிந்து கரங்களில்
நன்குமா வாக்கிய ஞானமாய்ச் சூலங்கொள்
சங்கரன் அந்தப் புரமெனக் காஞ்சியில்
மங்களக் காதைகொள்மாண் புடையாள் கண்டேன் . 55

ஆஹிதவிலாஸபங்கீம்,ஆப்ரஹ்மஸ்தம்பஶில்பகல்பனயா ।
ஆஶ்ரிதகாஞ்சீமதுலாம், ஆத்யாம் விஸ்பூர்த்தி மாத்ரியேவித்யாம்॥

முந்தைப் பிரமன் முதல் தம்பமீராக
எந்த உயிர்களும் ஈன்றிடும் ஆடலோடு
அந்தமாய்க் காஞ்சிஅமர்ந் தேஅருள் சிங்கார
சுந்தரப் பூரணச் சோதியைக் கண்டேனே 56

மூகோபி ஜடிலதுர்கதி,ஶோகோபி ஸ்மரதி ய: க்ஷணம் பவதீம்।
ஏகோ பவதி ஸ ஜந்து: லோகோத்தரகீர்திரேவ காமாக்ஷி ॥

மூகனே யாவானும் மூடியஅஞ் ஞானத்தால்
சோகமே மூண்டோனும் நின்னை யொருகண்
மாகினுஞ் சிந்தித்து அடைந்திட்டால் காமாக்ஷி
லோகத்தில் கீர்த்திகொண்ட ஒப்பிலா னாவனே, 57

பஞ்சதஶவர்ணரூபம் கஞ்சன காஞ்சீவிஹாரதௌரேயம் ।
பஞ்சஶரீயம் ஶம்போ: வஞ்சனவைதக்த்யமூலமவலம்பே ॥

பஞ்ச சரன்நாடும் பஞ்ச தசாக்ஷர
விஞ்சை வடிவான, மேன்மைகொள் தேவியாய்க
காஞ்சி ஈகர்வாழ்ந்து காமேசன் மோகிக்க
வஞ்சித்த சாலங்கொள் மூலத்தை வந்தித்தேன். 58

பரிணதிமதீம்சதுர்தா பதவீம்ஸுதியாம் ஸமேத்யஸௌஷும்னீம்।
பஞ்சாஶதர்ணகல்பித,பதஶில்பாம் த்வாம் நமாமி காமாக்ஷி ॥

ஈங்குச் சுழுமுனை நாடி இருந்துமே
நான்கு வகைவாக்கின் பேதத்தைப் பெற்றாலும்
ஆங்கெழுத்து ஐம்பதால் ஆயப் பதரூபி
யாங்கஞ்சி காமாக்ஷி யேவுன்னை வங்தித்தேன். 59

ஆதிக்ஷன் மம குருராட்ஆதி-க்ஷாந்தாக்ஷாராத்மிகாம் வித்யாம் ।
ஸ்வாதிஷ்டசாபதண்டாம் நேதிஷ்டாமேவ காமபீடகதாம் ॥

தித்திக்கும் வில்லுடன் சீர்காம பீடத்தில்
சத்தியாம் ஐம்பத்தோர் அக்ஷர ரூபியாம்
வித்தை வடிவியை என்குரு ராஜரே
மெத்தச் சமீபத்தில் உள்ளதாய்க் காட்டினார் 60

துஷ்யாமி ஹர்ஷிதஸ்மா சாஸனயா காஞ்சிபுரக்ருதோஸனயா।
ஸ்வாஸனயா ஸகலஜகத், பாஸனயா கலிதஶம்பராஸன்யா ॥

காமனைக் காத்ததும் காஞ்சியில் வாழ்வதும்
காமனைக் காய்ந்தோன் களிப்புறச் செய்ததும்
நேர்மையாய்த் தன்னுள் நிலைத்ததும் லோகங்கள்
சீர்மிக ஓங்கிடும் தேவியால் பூரித்தேன் 61

ப்ரேமவதீ கம்பாயாம்,ஸ்தேமவதீ யதிமனஸ்ஸு பூமவதீ ।
ஸாமவதீ நித்யகிரா ஸோமவதீ ஶிரஸி பாதி ஹைமவதீ ॥

இன்பமுடன் வேதம் எத்தும் இமையவள்
கம்பையில் அன்புளாள் மோனர் மனத்துளாள்
அம்புலி யைச்சிரம் தன்னில் அணிந்துளாள்
பண்புடன் பாரில் வியாபித் திலங்குறாள். 62

கௌதுகினா கம்பாயாம் கௌஸுமசாபேன கீலிதேனாந்த꞉ ।
குலதைவதேன மஹதா, குட்மலமுத்ராம் துனோது ந꞉ப்ரதிபா ॥

இட்டமாய்க் கம்பையில் இக்குவில் பூச்சரம்
இட்டமாய்க் கொண்டென்றன் சிந்தை அமர்ந்திடும்
இட்டப் பெருங்குல தெய்வத்தால் என்ஞானம்
மொட்டின் நிலைமாறிப் புட்பமாய்ப் பூக்கவே 63

யூனா கேனாபி மிலத், தேஹா ஸ்வாஹாஸஹாயதிலகேன ।
ஸஹகார மூலதேச ஸம்வித்ரூபா குடும்பினீ ரமதே ॥

மெச்சுமெய் ஞான வடிவக் குடும்பினி
அச்சுவா காபதி அக்கினித் தேவனை
மெச்சித் திலகமாய் நெற்றியில் பூண்பானை
அச்சக காரம்கீழ் அண்டிக் களித்தனன் 64

குஸுமஶரகர்வஸம்பத்,கோஶக்ருஹம் பாதி காஞ்சிதேஶகதம் ।
ஸ்தாபிதமஸ்மின் கதமபி,கோபித ம்ந்த்ரமயா மனோரத்னம் ॥

புட்பச் சரத்தோன் கருவமாம் பொக்கிஷம்
பொற்புடன் காஞ்சீ புரத்தில் அமர்ந்துளாள்
இப்பொக்கி ஷத்திந் ரத்தின மாகவென்
நட்புள உள்ளம் அமைந்து கிடக்குதே. 65

தக்தஷடத்வாரண்யம், தரதலிதகுஸும்ப ஸம்ப்ருதாருண்யம் ।
கலயே நவதாருண்யம் கம்பாதடஸீம்னி கிமபி காருண்யம் ॥

அத்துவா ஆறுக்கு அதீதமாய் ஆவதும்
புத்த விளமையும் பூத்த குசும்பத்தை
ஒத்தச் சிவப்புடன் ஓங்கியக் கம்பைவாழ்
மெத்த கருணைகொள் மூர்த்தியை வேண்டினேன் 66

அதிகாஞ்சிவர்தமானாம்,அதுலாம் கரவாணி பாரணாமக்ஷ்ணோ:।
ஆனந்த பாகபேதாம், அருணிம,பரிணாம கர்வபல்லவிதாம் ॥

ஆனந்த போதங்கள் யாவைக்கும் வேறதாய்
தானாகக் காஞ்சியில் ஓங்கித் தழைத்தங்கு
தானேயச் செம்மைக்குச் சான்றென வீறுகொள்
ஆனந்த ரூபமென் கண்கட்கு உணவாமே. 67

பாணஸ்ருணி பாஶகார்முக பாணிமமும் கமபி காமபீடகதம் ।
ஏணதரகோணசூடம்,ஶோணிமபரிபாகபேதமாகலயே ॥

அங்குசம் பாசமும் அம்புக்கோ தண்டமும்
செங்கரம் கொண்டுமத் திங்கள் முடிசூடும்
நற்கந்தச் செம்மைப் பரிணாம பேதத்தை
இங்கெனது உள்ளத்தில் வைத்துத் தியானித்தேன் 68

கிம் வோ பலதி மான்யை:பிம்பாதரசும்பிமந்தஹா ஸமுகீ।
ஸம்பாதகரீ தமஸாம் அம்பா ஜாகர்த்தி மனஸி காமாக்ஷீ ॥

இன்னிய கோவைக் கனியிதழ் மீதொரு
புன்னகை பூத்த முகமுடைக் காமாக்ஷி
என்னுளத்து அஞ்ஞானம் நீக்கி விளக்குங்கால்
அன்னிய ராலெனக்(கு) ஆவதிங்(கு) என்னவோ? 69

மஞ்சே ஸதாஶிவமயே பரிஶிவமயலலிதபௌஷ்ப பர்யங்கே।
அதிசக்ரமத்யமாஸ்தே காமாக்ஷீநாம கிமபி மம பாக்யம் ॥

பண்பாய்ச் சதாசிவ மஞ்சத்தின் மேலொளிர்
இன்பப் பரசிவ புஷ்பப் படுக்கையில்
அன்புடன் சக்கர மத்தியில் காமாக்ஷி
என்பவள் என்பெரும் பாக்கியமாய் உற்றாளே 70

ரக்ஷ்யோ(அ)ஸ்மி கோமபீட,லாஸிகயா கனக்ருபாம்புராஶிகயா ।
ஶ்ருதியுவதிகுந்தலீமணி,மாலிகயா துஹினசைலபாலிகயா ॥

காமபீ டக்கூட்த் தாடல் புரிபவள்
மாமணி மாலையாய் வேத முடியுனுக்
காமருங் காருண்ய சாகர மாகிய
ஏம மலைமகள் என்னையும் காக்கவே. 71

லீயே புரஹரஜாயே மாயே தவ தருண பல்லவச்சாயே ।
சரணே சந்த்ராபரணே காஞ்சீஶரணே நதார்த்திஸம்ஹரணே ॥

திங்கள் முடிசூடிச் சீருடன் காஞ்சிவாழ்
சங்கரன் நாயகி மாயா சொருபிணி
சங்கடம் யாவும் தவிர்த்தருள் தாயுமாம்
மங்களை நின்தளிர்ச் செஞ்சரன் ஒன்றினேன் 72

மூர்த்திமதி,முக்திபீஜே, மூர்த்னி ஸ்தபகித சகோரஸாம்ராஜ்யே।
மோதிதகம்பாகூலே முஹுர்முஹுர்மனஸிமுமுதிக்ஷாஸ்மாகம்॥

கம்பையில் வாழ்பவர் கண்டு களித்திடும்
அம்பை சகோரங்கள் சாம்ராஜ்ய மாகிய
அம்புலி சூடும்பே ரானந்த ரூபத்தில்
அன்பாகி ஆனந்தம் கொள்ள விரும்பினோம் 73

வேதமயீம்நாதமயீம் பிந்துமயீம்பரபதோத்யதிந்துமயீம்।
மந்த்ரமயீம்தந்த்ரமயீம் ப்ரக்ருதிமயீம்நௌமி விஶ்வவிக்ருதிமயீம்॥

நாதமும் பிந்துவும் மந்திர தந்திரமும்
வேதமும் மூலப் ரக்ருதி விக்ருதியும்
போதப் பரபதச் சந்த்ர மயமாகும்
ஆதிப் பராசக்தி அம்மையைப் போற்றினேன் 74

புரமதன புண்யகோடீ புஞ்ஜித கவிலோக ஸூக்திரஸதாடீ।
மனஸி மம காமகோடீ விஹரது கருணோவிபாகபரிபாடீ॥

மாகவி ஆகுவோர் வாக்குத்தேன் வெள்ளமா(ய்)
யாகிப் புராரியின் புண்ணிய எல்லையாம்
மாகரு ணாகரி காமகோ டிக்கிகை
ஏகியென் உள்ளத்து எழில்நட மாடவே. 75

குடிலம்சடுலம் ப்ருதுலம் ம்ருதுலம் கசநயன ஜகனசரணேஷு\।
அவலோகிதமவலம்பிதம் அதிகம்பாதடமேயமஸ்மாபி:॥

மென்மைச் சரணமும் மின்னிய கண்களும்
திண்மைச் சகனமும் சீர்சுருள் கூந்தலோ
என்மன வாக்குக் கெட்டாது கம்பைவாழ்
அம்மையைக் கண்டே அடைக்கல மானோமே. 76

ப்ரத்யங்முக்யாத்ருஷ்ட்யா ப்ரஸாததீபாங்குரேண காமாக்ஷ்யா: ।
பஶ்யாமிநிஸ்துலமஹோ பசேலிமம் கமபி பரஶிவோல்லாஸம்॥

அம்மைகா மாக்ஷியின் ஆரருள் என்றதோர்
செம்மையாய் வீசிடும் தீப ஒளியினால்
உண்முக நோக்கடைந்து ஒப்பற்ற செங்கனி
என்னும் பரசிவ உல்லாசம் கண்டேனே. 77

வித்யே விதாத்ருவிஷயே காத்யாயனி காளிகாமகோடிகலே।
பாரதி பைரவி பத்ரே சாகினி சாம்பவி ஶிவே ஸ்துவே பவதீம்॥

காம கலாரூபி ,காளிகாத் யாயனி
காமகோ டிச்சிவை பாரதி பைரவி
சீர்மிகும் சாம்பவி சாகினி பத்திரை
யாமொரு வித்யையாம் அம்மையைப் போற்றினேன் . 78

மாலினி மஹேஶசாலினி காஞ்சீகேலினி விபக்ஷகாலினி தே।
ஶூலினிவித்ருமசாலினி ஸுரஜனபாலினிகபாலினி நமோஸ்து॥

மாலினி மகேச சாலினி மாண்புடைச்
சூலினி தூயக் கபாலினி தேவர்கள்
பாலினி சத்துரு சங்காரி வித்ரும
சாலினி காஞ்சிவாழ் சக்திக்கே வந்தனம் 79

தேஶிகஇதிகிம்ஶங்கே தத்தோத்ருக்தவ நு தருணிமோன்மேஷ: ।
கோமோக்ஷி ஶூலபோநண: கோமோகமஸமயதீக்ஷோயோம் ॥

அம்மைகா மாக்ஷியின் பௌவன்ச் சீலமே
மன்மதன் வேதத்தில் மாண்புறச் செப்பிடும்
அம்மகா தீக்ஷையில் அச்சூல பாணிக்குத்
தன்மையுள் ஆசானும் தானாவென் றெண்ணுறேன் 80

வேதண்டகும்படம்பர,வைதண்டிககுசபராத்மத்யாய ।
குங்குமருசே நமஸ்யாம் ஶங்கர நயனாம்ருதாய ரசயாம:॥

தந்தியின் கும்பத்தை யொத்த தனங்களால்
நொந்திடும் நுண்ணிடை குங்கும மேனியோடு
அந்தச்சிவன் விழிக்கு ஆனந்தம் ஊட்டவே
வந்த அமுதத்தை வந்தனை செய்குவோம் 81

அதிகாஞ்சிதமணிகாஞ்சனகாஞ்சீமதிகாஞ்சி காஞ்சிதத்ராக்ஷும் ।
அவனதஜனானுகம்பாம் அனுகம்பா கூலமஸ்மதனுகூலாம் ॥

நன்குப் பலவகை நல்மணி வைத்திட்ட
தங்கவொட் யாணம் தரித்திங் கடியர்பால்
பொங்கும் கருணையோ, டன்பர்க்கு அநுகூல
மங்கையைக் காஞ்சியில் கம்பையில் கண்டேனே 82

பரிசிதகம்பாதீரம் பர்வதராஜன்யஸுக்ருதஸன்னாஹம் ।
பரகுருக்ருபயா வீக்ஷே பரமஶிவோத்ஸங்கமங்களாபரணம் ॥

இங்குக்-கம் பாதீரத்(து) இன்புற் றுறைவாளும்
அங்குச் சிவன்மடிக்(கு) ஆபரண மாகும்
நன்கிம வான்செய்த நற்றவப் பேற்றினை
என்குரு நாதர்கரு ணையால் கண்டேனே 83

தக்தமதனஸ்ய ஶம்போ: ப்ரதீயஸீம் ப்ரஹ்மசர்ய வைதக்தீம் ।
தவ தேவி தருணிமஶ்ரீ,சதுரிமபாகோ ந சக்ஷமே மாத: ॥

அஙகச னைச்சாம்ப லாக்கிவை ராக்யங்கொள்.
சங்கரன் கொண்ட பிர்ம சரியத்தை
மங்களை 'நின்னெறில் யெளவன் சாதுர்யம்
இங்குச் சிறிதும் சகிக்கவில் லைபோலும் 84

மதலதமாலபத்ரா வஸனிதபத்ரா கராத்ருதகனித்ரா ।
விஹரதி புலிந்யோஷா குஞ்ஜா பூஷா பணீந்தரக்ருதவேஷா॥

குந்து மணிமாலை கும்பச் சலப்பொட்டும்
அந்த முடன்கையில் மண்வெட்டி யுங்கொண்டு
அந்தச் சருகாடை பாம்பு மணிந்திட்ட
விந்தைகொள் வேடர் மகள்விளை யாடுகிறாள் 85

அங்கே ஶுகினீ கீதே கௌதுகினீ பரிஸரே ச காயகினீ ।
ஜயஸிஸவிதேம்பபைரவ,மண்டலினீ,ஶ்ரவஸிஶங்ககுண்டலினீ॥

சங்குக் குழைபூண்டு சங்கத தர்லங்கொண்(டு)
இங்குனைப் பாடகர் பைரவர் சூழ்ந்திட
இங்குன் மடியில் கிளிகொண்டும் என்தாயே
நன்குநீ ஓங்கித் திகழ்கின்றாய் என்றுமே 86

ப்ரணதஜனதாபவர்க்கா, க்ருதபஹுஸர்க்கா
ஸஸிம்ஹஸம்ஸர்க்கா।
காமாக்ஷி முதிதபர்க்கா ஹதரிபுவர்கா த்வமேவ ஸா துர்க்கா ॥

யாவும் அளித்திட்டு அரனைக் களிப்பித்து
சேவிக்கும் அன்பர்க்குச் சீராம் பதம்தந்து
மேவும் பகைதீர்த்துச் .சிம்மத்தின் மீதேறி
தேவிகா மாக்ஷிநீ துர்க்கையாய் ஆகின்றாய் 87

ஶ்ரவணசலத்வேதண்டா,ஸமரோத்தண்டா துதாஸுரஶிகண்டா ।
தேவி கலிதாந்த்ரஷண்டா த்ருதனரமுண்டா த்வமேவ சாமுண்டா॥

தன்கையில் மாந்தர் தலைகொண்ட அசுரரைச்
சங்கரித் துத்தந்தித் தார்களும் பூண்டென்றும்
வெங்கள வேதமும் தந்தக் குழைகொண்டும்
இங்குச்சா முண்டியும் ஆனாய்நீ காமாக்ஷி. 88

உர்வீதரேந்த்ரகன்யெ தர்வீ பரிதேன பக்தபூரேண ।
குர்வீமகிஞ்சனார்த்திம் கர்வீகுருஷே: த்வமேவ காமாக்ஷி ॥

அன்ன ரசத்தைக் கரண்டியில் கொண்டன்பர்
இன்னல்கள் யாவும் இமைப்போதில் தீர்த்தருள்
அன்னபூர் ணித்தாயாய் அம்மலை ராஜனின்
கன்னியு மானாய்நீ காஞ்சிகா மாக்ஷியே 89

தாடிதரிபுபரிபீடன,பயஹரணே, நிபுணஹலமுஸலா ।
க்ரோடபதிபீஷணமுகீ,க்ரீடஸி,ஜகதி த்வமேவ காமாக்ஷி ॥

இங்குப் பகைவர் பயமெனும் பீடைக்குப்
பங்கம் புரியம் உலக்கை கலப்பையும்
தன்கரம் கொண்டு முகத்தினில் பீதியே
தங்கும் வாராகியு மானாய்கா மாக்ஷிநீ 90

ஸ்மரமதனவரணநலோலா மன்மதஹேலாவிலோஸ,மணிசாலா।
கனகருசிசௌர்யஶீலா, த்வமம்ப பாலா கரோப்ஜத்ருதமாலா॥

காமனைக் காய்ந்தோன் மணக்க விரும்பிடும்
காமனின் லீலா மணிச்சாலை ஆகியும்
ஏமத்தை மிஞ்சும் எழிலுடன் பூங்கையில்
மாமலர் மாலைகொள் பாலைநீ அம்மையே 91

விமலபடீ கமலகுடீ புஸ்தக,ருத்ராக்ஷஶஸ்த ஹஸ்தபுடீ ।
காமாக்ஷி பக்ஷ்மலோக்ஷீ கலிதவிபஞ்சீ விபாஸி வைரிஞ்சீ ॥

தூங்கக் கமலத்தில் தூய உடைஅணிந்து
தங்கையில் ஏடும் ருத்திராக் கங்கொண்டு
நன்கொளி வீசும் நயங்கொள் யாழ்மீட்டும்
மங்கை சரஸ்வதி யானாய்நீ காமாக்ஷி 92

குங்குமருசிபிங்கமஸ்ருக்,பங்கிலமுண்டாலிமண்டிதம் மாத:।
ஜயதி தவ ரூபதேயம் ஜபபடபுஸ்தக வராபய கராப்ஜம் ॥

குங்கும மேனியும் சொட்டும் இரத்தமோ(டு)
அங்குத் தலைமாலை சூடிச் சபமாலை
யும்கையி லேடும் வரமும் அபயமும்
நன்கு விளங்கிடத் தாயேநீ ஓங்குறாய் 93

கனகமணிகலிதபூஷாம் காலாயஸகலஹஶீல காந்திகலாம்।
காமாக்ஷி ஶீலயே த்வாம் கபாலஶூலாபிராமகரகமலாம்॥

தங்கம் நவமணி பூஷணம் தங்கியே
இங்கு உருக்கிய எஹ்கைப் பழித்திடும்
அங்கம் கபாலமும் சூலமும் தாங்கிய
செங்கை மலர்கொளும் தேவி. காமாக்ஷி. 94

லோஹிதிம புஞ்சமத்யே,மோஹிதபுவனே முதா நிரீ க்ஷந்தே|
வதனம் தவ குசயுகலம் காஞ்சீஸீமாம் ச கேபி காமாக்ஷி||

செந்நிற மான அனாகதம் மத்தியில்
பொன்னுள நுண்ணிடை யுந்தன மும்முகம்
உன்னிச் சிலமேலோர் ஆனந்த மாகவே
என்னாளும் இன்புளார் ஈசைகா மாக்ஷியே, 95

ஜலதித்விகுணிதஹுதபஹ,திசாதினேஶ்வர,கலாஶ்வினேயதலை: ।
நளீனைர்மஹேஶி கச்சஸி ஸர்நவோத்தரகர கமல தலமமலம் ॥

தாயே மகேஷ்வரி குண்டலி னீசக்தி
நீயேஅவ் ஆதாரம் ஆறின் வழியாகப்
போயங்கு மேலான தூயத் தளங்களில்
ஆயிரம் கொண்ட கமலம் அடைகின்றாய் 96

ஸத்க்ருத தேஶிகசரணா: ஸபீஜநிர்பீஜயோக நிஶ்ரேண்யா ।
அபவர்க்கஸௌதவலபீம்,ஆரோஹந்த்யம்ப கேபி தவ க்ருபயா ॥

சற்குரு சேவைசெய் பாக்கியம் உற்றோர்உன்
நற்கரு ணைக்காளாய் யோக சமாதியில்
பெற்று விகற்பம் இரண்டும் அதற்குமேல்
உற்றுவம் முக்தியின் மாடியில் ஏறுவார் 97

அந்தரபி பஹிரபி த்வம், ஜந்து ததேரந்தகாந்தக்ருதஹந்தே ।
சிந்திதஸந்தானவதாம், ஸந்ததமபி தந்தநீஷி மஹிமானம் ॥

எக்காலும் சீவர்கள் உள்ளும் புறத்துமுள்
அக்கால காலனின் ஆனந்த ரூபியே
எக்காலூம் சிந்திக்கும் அன்பர்க்குப் பாவிக்க
மிக்கதாம் ஞானத்தை மேவித் தருகின்றாய் 98

கலமஞ்ஜுலவாகனுமி த; கலபஞ்ஜரகதசுகக்ரஹௌத்கண்ட்யாத்।
அம்ப சதனாம்பரம்தே, பிம்பபலம் சம்பராரிணா ந்யஸ்தம் ॥

நன்மன அன்பர்கள் கண்டமாம் கூண்டுறை
இன்மொழி யாம்கிளி தன்னைப் பிடித்திட
மன்மதன் வைத்தக் கோவைக் கனியென
உன்னிதழ்ச் செம்மை திகழ்கன்ற தம்மையே. 99

ஜய ஜய ஜகதம்ப சிவே, ஜயஜய காமாக்ஷி ஜய ஜயாத்ரிஸுதே।
ஜய ஜய மஹேமதயிதே, ஜயஜய சித்ககன கௌமுதிதீரே ॥

ஜயஜக தம்பிகே ஜயசிவ மங்களே
ஜயசித்தின் வானொளி வெள்ளமே ஜயஜய
ஜயகரி ராஜன் மகளே ஜயஜய ஜயமா
மகேச்வரீ காமாக்ஷி ஜயஜய. 100

ஆர்யாசதகம் பக்த்யா படதாமார்யாகடாக்ஷேண ।
நிஸ்ஸரதிவதககமலாத் வாணீபீயூவதோரணீ திவ்யா ॥ 101

ஆர்யா சதகம் முற்றிற்று.

